[2020] 4 எஸ்.சி.ஆர். 295

தெலுங்காணா மாநில தெற்கு மின் பகிர்மான நிறுவனம் லிட்.

மற்றும் ஒருவர்

எதிர்

தி/ள். ஸ்ரிக்தா பாணங்கள்

மாண்புமிகு நீதியரசர் திரு.சஞ்சய் கிஷன் கவுல்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.கே. எம். ஜோசப்

(உரிமையியல் மேல்முறையீடு எண். 1815 / 2020

ஜூன் 1, 2020

மின்சாரம்– மின்சார பாக்கி–விலை வாங்கப்பட்ட நிறுவனத்தின் முந்தைய உரிமையாளரின் மின் கட்டண பாக்கியை செலுத்த ஏலத்தில் வாங்கியவரின் பொறுப்பு– இந்த வழக்கில், நிறுவனமானது "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே" என்ற அடிப்படையில் விற்கப்படுவதாகவும் எவ்விதமான பொறுப்புரிமை, பற்று, வில்லங்கம், சொத்து வரி பாக்கி, மின் கட்டண பாக்கி ஆகியவற்றின் பொறுப்பிலிருந்து ஏலம் நடத்தும் அங்கிகாரம் பெற்ற அதிகாரி தன்னை விடுவித்துக்கொள்வார் என்றும் ஏல அறிவிப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது– ஏலம் வாங்கியவர், மேல்முறையீட்டாளர் –மின் வாரிய துறையிடம் நிறுவனத்தை இயக்க மின் இணைப்பு வழங்கக்கோரி செய்த மனு முந்தைய மின் கட்டண பாக்கி உள்ளது

என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டுள்ளது–ஆந்திரப்பிரதேசத்தில் பகிர்மானங்களின் விநியோகம் மற்றும் சில்லறை விநியோக உரிமத்தின் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரிவு 5.9.6 மற்றும் 8.4–ன் படி புதிதாக வாங்கியவர்களிடமிருந்து பாக்கியினை மீட்பதற்கான உரிமையினை மின்சாரத்துறை வலியுறுத்தியது. தீர்முடிவு: ஏல அறிவிப்பில் நிலுவையிலிருக்கும் மின் கட்டண பாக்கி புதிதாக வாங்குபவரின் பொறுப்பாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாலும் விற்பனையானது "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே" என்ற அடிப்படையில் நடைபெற்றதாலும் மின்சாரத்துறை முன் உரிமையாளரின் பாக்கியினை மேல்முறையீட்டாளர்–விலை வாங்கியவரிடமிருந்து கேட்க மின்சாரத்துறைக்கு முழு உரிமையும் உள்ளது.

மின்சாரம்: மின்கட்டண பாக்கி, மின்சார சட்டம், 2003 உ/இ விநியோகத்தின் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான சட்ட ரீதியான பாக்கியை போன்ற சமமான நிலையை பெறும்– எனவே சட்டத்தின் பிரிவுகளின்படி, மிகவும் குறிப்பாக மின்சார சட்டம், 2003, பிரிவு 56–ன் படி (அதே பொருளில் மின்சார சட்டம், 1910 பிரிவு 24க்கு சமமானது) அதனை தளர்த்த முடியாது– மேலும் அதனை முழுவதும் ஒப்பந்த தன்மையில் உள்ள நிலுவைத்தொகைக்கு இணையான தன்மையாக எடுத்துக்கொள்ள முடியாது.

மேல்முறையீட்டை அனுமதித்து இந்த நீதிமன்றமானது

தீர்வு: 1.1 மின்கட்டண பாக்கி, மின்சார சட்டத்தின் கீழும் விநியோகத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் படியும் சட்டப்பூர்வமான தன்மை கொண்டிருக்கும் போது அதனை சட்ட விதிகளின்படி, குறிப்பாக மின்சார சட்டம், 2003, பிரிவு 56–ன் படி (அதே பொருளில் மின்சார சட்டம், 1910 பிரிவு 24 க்கு சமமானது) அதனை தளர்த்த முடியாது– மேலும் அதனை முழுவதும் ஒப்பந்த தன்மையில் உள்ள நிலுவைத்தொகைக்கு இணையான தன்மை கொண்டதாகவும் கருத முடியாது. [பத்தி 15 அ] [303–எப்]

1.2 கேள்விக்குரிய மின்னனு ஏல அறிவிப்பில் நிலுவையில் இருக்கும் மின்கட்டண பாக்கியானது அறுதியிடப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அது ஏலத்தில் வாங்கியவரின் பொறுப்பு என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதாலும் விற்பனையானது "எவ்வாறு இருப்பினும் எங்கு இருப்பினும் என்ன இருப்பினும் எவ்வித மீட்புரிமையும் இன்றி" என்ற அடிப்படையில் நடைபெற்றிருப்பதாலும் மின்கட்டண பாக்கியை செலுத்தும் பொறுப்பு எதிர்மேல்முறையீட்டாளர் (கிரையம் பெற்றவர்) சேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.[பத்தி 15 ஆ][303–ஜி 304–அ–ஆ]

ஹைத்ராபாத் வனஸ்பதி லிட் எதிர் ஆந்திரா மாநில மின் வாரியம் மற்றும் பலர். (1998) 4 எஸ்சிசி 470: [1998] 2 எஸ்சிஆர் 620– பின்பற்றப்பட்டது.

தாக்ஷின் ஹரியானா பிஜ்லி விட்ரான் நிகாம் லிட் எதிர் பாரமவுன்ட் பாலிமர்ஸ் (பி) லிட் நிறுவனம் (2006) 13 எஸ்சிசி 101: [2006] 7 சப்லி.எஸ்சிஆர் 635; *பஸ்சிமன்சால் வித்யுத் விட்ரான் நிகாம் லிமிடெட் மற்றும் பலர் எதிர் டிவிஎஸ் ஸ்டீல்ஸ் மற்றும் அலாய்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் பலர்* (2009) 1 எஸ்சிசி 210; [2008] 15 எஸ்சிஆர் 766 சார்பு கொள்ளப்பட்டது.

இஷா மார்பிள்ஸ் எதிர் பீகார் மாநில மின்வாரியம் மற்றும் ஒருவர் (1995) 2 எஸ்சிசி 648: [1995] 1 எஸ்சிஆர் 847; *ஹரியானா மாநில மின் வாரியம் எதிர் ஹனுமான் ரைஸ் மில்ஸ், தனாவ்ரி மற்றும் பலர்* (2010) 9 எஸ்சிசி 145; [2010] 10 எஸ்சிஆர் 217– வேறுபடுத்தி காட்டப்பட்டது.

தெலங்கானா தென்னக மின் பகிர்மான நிறுவனம் லிட் (அதன் தலைமை நிர்வாக இயக்குனர் மூலம்) மற்றும் பலர் எதிர் கோபால் அகர்வால் மற்றும் பலர் (2018) 12 எஸ்சிசி 644; *சிறப்பு அதிகாரி, வர்த்தகம், ஒரிசா வடகிழக்கு மின் விநியோக நிறுவனம் மற்றும் ஒருவர் (NESCO) எதிர் ரகுநாத் பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் ஒருவர்* (2012) 13 எஸ்சிசி 479; [2012] 13 எஸ்சிஆர்71 – பார்வையிடப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட வழக்குகள்</u>

[1995] 1 SCR 847	வேறுபடுத்தி காட்டப்பட்டது	பத்தி 7
(2018) 1 2 SCC 644	பார்வையிடப்பட்டது	பத்தி 7
[1998] 2 SCR 620	பின்பற்றப்பட்டது	பத்தி 9

[2006] 7 Suppl. SCR 635	சார்பு கொள்ளப்பட்டது	பத்தி 10
[2008] 15 SCR 766	சார்பு கொள்ளப்பட்டது	பத்தி 12
[2010] 10 SCR 217	வேறுபடுத்திகாட்டப்பட்டது	பத்தி 14
[2012] 13 SCR 71	பார்வையிடப்பட்டது	பத்தி 14

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீட்டு எண்: 1815/2020.

ஹைத்ராபாத்தில் உள்ள தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களின் உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை மேல்முறையீட்டு எண். 258 / 2018-ல் 30.04.2018 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளர்களுக்காக மூத்த வழக்கறிஞர் திரு,பி.எஸ் நரசிம்மா, வழக்கறிஞர்கள் திரு,மொஹமது பன்டே அலி மற்றும் திரு,ராக்கேஷ். கே. ஷர்மா ஆகியோர் முன்னிலை ஆனார்கள்.

எதிர்மனுதாரருக்காக வழக்கறிஞர்கள் தி/ள். பில்சா மூனிஸ், திரு,ஜி. ராமகிருஷ்ண பிரசாத், திரு,சுயோதன் பைராபனேனி, திரு,மொஹமது வசே கான் மற்றும் திரு,பரத் ஜே ஜோஷி ஆகியோர் முன்னிலை ஆனார்கள்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை நீதியரசர் சஞ்சய் கிஷன் கவுல் அவர்களால் பகரப்பட்டது.

1. எதிர்மேல்முறையீட்டாளர் நிலுவை தொகையினை செலுத்த தவறியதற்காக பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002–ன் கீழ் (இதன் பின்பு SARFAESI சட்டம் என குறிப்பிடப்படும்) சின்டிகேட் வங்கியால் (பிணைக் கடனாளர்) எலத்தில் விட்ட M/s. SB பானங்கள் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சொந்தமான நிறுவனத்தினை ஏலத்தில் எடுத்தவர் ஆவார். தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சட்டப்புள்ளியானது முந்தைய உரிமையாளரின் முந்தைய மின் கட்டண பாக்கி மீதான பொறுப்பை எதிர்மேல்முறையீட்டாளர் மீது சுமத்த முடியுமா என்பதாகும்.

2. பிரச்சனைக்குரிய நிறுவனமானது மேத்சால் மாவட்டம், கீசாரா மன்டல், ராம்பள்ளி கிராமத்தில் உள்ள 1 ஏக்கர் 13 குண்டாஸ் பரப்பளவுள்ள சர்வே எண். 282–ல் உள்ள நிலத்தில் அமைந்திருக்கும் கணிம நீர் அடங்கிய பாட்டிலில் ஆயத்தம் செய்யும் ஆலை ஆகும். மேலே கூறியவாறு கடன் திருப்பி செலுத்த தவறியதால் கடன் கொடுத்தவரான சின்டிகேட் வங்கி சொத்தினை ஏலத்திற்கு கொண்டு வந்து அதற்காக 25.05.2017 தேதியிட்ட மின்னனு ஏல அறிவிப்பு வழங்கியதில் எதிர்மனுதாரர் வெற்றிகரமாக ஏலம் எடுத்தவர் ஆவார். எங்கள் முன் இருக்கும் பிரச்சனையை மதிப்பிட ஏல அறிவிப்பின் சில தொடர்புடைய சரத்துகளை இங்கே மறுபதிவு செய்வது அவசியமாகும்:

"கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகையினை மீட்க "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே என்ற அடிப்படையில் "பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் (இதன் பின்பு இந்த விதிகள் என குறிப்பிடப்படும்) விதி எண் 8 & 9–ன் கீழ் விற்கப்படுகிறது:

. . . .

30–04–2017 தேதியன்று மொத்த நிலுவைத்தொகை	ரூ. 13,97,26,258.77 (பதிமூன்று கோடியே தொன்னூற்று ஏழு லட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருநூற்று ஐம்பத்து எட்டு ரூபாய் எழுபத்து ஏழு பைசா) மற்றும் பணம் செலுத்தும் தேதி வரை வருங்கால வட்டி மற்றும் செலவுத்தொகை, அதன் கணக்குகள் எண் 1) 373OSLB140940002 & 2) 301510100006439–ல்
வங்கிக்கு தெரிந்தவரை சொத்தின் மேலிருக்கும் வில்லங்கத்தின் விபரங்கள்	சொத்து எண். 01–க்கு இல்லை சொத்து எண். 02–க்கு: எங்களது உரிமை மூல பத்திர வைப்பு அடைமான ஆவணத்திற்கு பிறகு பின்வரும் பரிவர்த்தனைகள் வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது

	1. 15/06/2016 தேதியிட்ட ஆவணம் எண் 2611/2016–ன் படி 540 சதுர யார்டு விஸ்திரனமுள்ள சொத்தை அடைமானம் வைத்தவர் மதிப்பு ரூ. 972000/– க்கு தனிநபருக்கு விற்பனை செய்துள்ளார் 2. 05/02/2015 தேதியிட்ட ஆவணம் எண் 657/2015–ன் படி 620.83 சதுர யார்டு விஸ்திரனமுள்ள சொத்தை அடைமானம் வைத்தவர் ராம்பள்ளி கிராம பஞ்சாயத்து செயல் அலுவலருக்கு மதிப்பு ரூ. 1242000/– க்கு விற்பனை செய்துள்ளார் 3. 05/08/2014 தேதியிட்ட ஆவணம் எண் 2721/2015–ன் படி 204.75 சதுர யார்டு விஸ்திரனமுள்ள சொத்தை அடைமானம் வைத்தவர் ராம்பள்ளி கிராம பஞ்சாயத்து செயல் அலுவலருக்கு மதிப்பு ரூ. 248000/– க்கு விற்பனை செய்துள்ளார்
உள்ளாட்சி அரசாங்கத்திற்கு நிலுவையிலுள்ள	ரூ. 83,17,152/– (என்பத்து மூன்று லட்சத்து பதினேழாயிரத்து நூற்று ஐம்பத்தி இரண்டு மட்டும்)

கட்டண பாக்கி விபரங்கள் (சொத்து வரி, குடிநீர், கழிவு நீர், மின் கட்டணம் மற்றும் பிற)	
சொத்தின் ஒதுக்கப்பட்ட அடிப்படை விலை	சொத்து எண். 01 – க்கு ரூ. 77,63,000/– சொத்து எண். 02– க்கு ஒதுக்கப்பட்ட அடிப்படை விலை: ரூ. 5,83,37,000/– (ஐந்து கோடியே என்பத்து மூன்று லட்சத்து முப்பத்தி ஏழாயிரம் ரூபாய் மட்டும்) மொத்தம் 28 எண்ணிக்கையுள்ள இயந்திர பொருட்களுக்கு அடிப்படை விலை ரூ. 3,25,28,000/– (மூன்று கோடியே இருபத்து ஐந்து லட்சத்து இருபத்து எட்டாயிரம் மட்டும்)

. . . .

<u>விதிகள் மற்றும் நிபந்தனைகள்</u>

. . . .

21. வெற்றிகரமாக ஏலம் கேட்பவர் சொத்து தொடர்பாக முத்திரை கட்டணம், விற்பனை சான்றிதழ் உட்பட உள்ள கட்டணங்கள், பதிவுக்கட்டணம், மைய/மாநில அரசுக்கு செலுத்த வேண்டிய அனைத்து சட்டப்படியான கட்டண பாக்கி, வரி மற்றும் தீர்வை

மற்றும் சொத்து சம்மந்தமான நிலுவையிலிருக்கும் மற்றும் வருங்கால செலவு ஆகியவற்றை ஏற்க வேண்டும்.

. . . .

24. சொத்து எல்லாவற்றையும் பொறுத்து ஏதேனும் சட்டப்படியான கட்டண பாக்கி உட்பட "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே" என்ற அடிப்படையில் விற்கப்படுகிறது. ஏலம் எடுக்க நினைப்பவர்கள் வங்கியின் பொருட்பிணை போக வேறு ஏதேனும் சொத்தின் மீதான அதிகாரியின் உரிமை கோரிக்க, பொருட்பிணை/வில்லங்கம் ஆகியவற்றை பொறுத்து தனியாக விசாரித்து ஏலத்தை சமர்பிப்பதற்கு முன்பு சொத்தின் உரிமை மூலம், விஸ்திரனம், தரம் மற்றும் அளவை பொறுத்து அவர்களே மனநிறைவடைந்து கொள்ள வேண்டும். சொத்தில் முரண்பாடு ஏதும் இருப்பின் ஏலம் சமர்ப்பித்த தேதியிலிருந்து எதிர்கால உதவிமூலம் அனைத்திற்கும் ஏலத்தில் பங்குபெறுபவரே பொறுப்பாவார்.

25. ஏலம் சமர்பித்த / விற்பனை உறுதி செய்யப்பட்ட பின்பு விற்பனைக்குரிய சொத்து தொடர்பாகவோ சொத்தின் மீதான பொருட்பிணை / வில்லங்கம் அல்லது வேறு எந்த விசயத்திற்கும் எவ்விதமான கோரிக்கையும் ஏற்கப்பட மாட்டாது.

26. அதிகாரம் பெற்ற அலுவலர் விற்பனைக்குட்பட்ட சொத்து தொடர்பாக எந்த ஒரு பொருட்பிணை, பற்று, வில்லங்கம், சொத்து வரி பாக்கி, மின் கட்டண பாக்கி உள்ளிட்டவைக்கோ

அல்லது அரசாங்கத்திற்கோ, உள்ளாட்சி அமைப்புகளுக்கோ வேறு எந்த நபருக்கும் கொடுக்க வேண்டிய நிலுவைத்தொகைக்கோ பொறுப்பாக மாட்டார்."

3. மேலே கூறப்பட்டுள்ள ஏல அறிவிப்பு, நிறுவனமானது பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 (இதன் பின்பு 'இந்த சொல்லப்பட்ட விதிகள்' என குறிப்பிடப்படும்) விதி 8 & 9–ன் படி "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே என்ற அடிப்படையில்" விற்கப்பட்டுள்ளதை காட்டுகிறது. மேலே கூறப்பட்டுள்ள மின்னனு ஏல விற்பனை அறிவிப்பு, நிலுவையிலிருக்கும் மொத்த பாக்கித் தொகை மிக அதிகமானது என்பதையும் ஆனால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலையானது குறைவு என்பதும் ஏலம் எடுத்தவரின் உண்மையான கிரைய மறுபயன் ரூ. 9,18,65,000/– என்பதும் அது குறைத்தபட்ச அடிப்படை விலையை விட சுமார் ரூ. 10 லட்சம் கூடுதலானது என்பதையும் காட்டுகிறது. மேலே சுட்டிக்காட்டப்பட்ட சரத்து 24, விற்பனை "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே" என்ற அடிப்படையில் நடைபெற்றதையும், அது "சட்டப்படியான நிலுவைத்தொகை உட்பட அனைத்தையும் பொறுத்து" என்பதையும் தெளிவாக்குகிறது. இந்த சரத்தானது, மற்றொரு சரத்து 26–க்கு உட்பட்டது. அதன்படி, ஏலம் நடத்தும் அதிகாரம் பெற்ற அலுவலர், பொருட்பிணை, பற்று, வில்லங்கம், சொத்து வரி பாக்கி, மின் கட்டண பாக்கி, ஏனையவை ஆகியவற்றின் பொறுப்பிலிருந்து

தன்னைத்தானே விடுவித்துக்கொள்வார். இந்த சரத்துக்களை முழுமையாக வாசித்தால், ஏல அறிவிப்பில் அடிப்படை விலை வழங்கப்பட்டிருப்பதும் அதைவிட ரூ. 10 லட்சம் கூடுதலாக ஏலம் கேட்க்கப்பட்டுள்ளதும் மின் கட்டண பாக்கி உட்பட சில வகையான பொருட்பிணை, பற்று, வில்லங்கம் ஆகியவை செலுத்தப்பட்ட கிரைய மறுபயனுக்கு அப்பாற்பட்டது என்பதையும் மேற்படி சரத்துக்கள் எவ்வித ஐயமுமின்றி தெளிவாக்கும் என்பதை வலியுறுத்துவதே இதன் நோக்கமாகும்.

4. அடுத்ததாக ஏலத்தின் படி எழுதிக்கொடுக்கப்பட்ட 29.09.2017 தேதியிட்ட கிரைய ஆவணத்தை பார்க்கும்போது, அதில் விற்பனை "பிணைக்கடணாளருக்கு தெரிந்த அனைத்து வில்லங்கத்திலிருந்தும் நீங்கலாக" என சொல்லப்பட்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளருக்கு விற்பனையாளரால் "சட்டப்படியான பொறுப்பு, வரி ஆகியவற்றை மீட்டெடுத்தல் உட்பட உரிமை மூலத்தில் உள்ள குறைபாட்டினால் எழும் இழப்பு மற்றும் அத்தகைய உரிமை மூல குறைபாடு காரணமாக நேரிடும் வழக்கு செலவுகளுக்கு" எதிராக ஈட்டுறுதி கொடுத்துள்ளார். இந்த ஈட்டுறுதி, உரிமை மூல குறைபாடு தொடர்புடைய இந்த சரத்தில் குறிப்பிட்டுள்ள அம்சங்களுக்கு மட்டுமே கட்டுப்பட்டது, மின் கட்டண பாக்கி போன்ற பிற பொறுப்புகளுக்கு இல்லை.

5. எதிர்மேல்முறையீட்டாளர் 1–ம் மேல்முறையீட்டாளரிடம் தண்ணீரை பாட்டிலில் நிரப்பும் ஆலையை இயக்க தேவையான 500 KVA இணைப்புக்கு அனுமதி கோரி மனு செய்த போது தான் பிரச்சனை எழுந்துள்ளது. இந்த கோரிக்கையானது 20.10.2017 தேதியின்படி சுமார் ரூ.50,47,715/– அளவுக்கு முந்தைய மின் கட்டண பாக்கி உள்ளது என்ற அடிப்படையில் மறுக்கப்பட்டுள்ளது. 1–ம் மேல்முறையீட்டாளர், இதனடியில் மறுபதிவு செய்யப்பட்டுள்ள ஆந்திரப்பிரதேச பகிர்மான விநியோகம் & சில்லறை விநியோகத்தின் உரிமங்கள், பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள் (சுருக்கமாக விநியோக பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள்) சரத்துக்கள் 5.9.6 மற்றும் 8.4–ன் வாசகத்தின் படி புதிதாக ஏலம் எடுத்தவரிடமிருந்து (அதாவது எதிர்மேல்முறையீட்டாளர்) தொகையினை மீட்கும் உரிமையினை வலியுறுத்தினார்:

> "5.9.6 ஒப்பந்தம் முடிவுற்ற பின் மின் கம்பிகளை அகற்றுதல்: தாழ்வழுத்த மற்றும் உயர் அழுத்த ஒப்பந்தம் முடிவுற்ற பின் நிறுவனமானது மின் கம்பிகளை அகற்றவும் பொருட்கள், அளவி, தொடறறு கருவி, ஏனையவை ஆகியவற்றை அகற்றவும் உரிமையுடையது. ஒப்பந்தம் முடிவுற்ற பின்பு முந்தைய மின் இணைப்பில் கட்டண பாக்கி இல்லாதிருக்கும் பட்சத்தில் நுகர்வோரானவர் அதே வளாகத்திற்கு மின்சாரம் வழங்க விண்ணப்பம் செய்யும் போது அவர் புதிய மனுதாரராகவே கருதப்படுவார் ."

. . . .

"8.4 மின் இணைப்பு மாற்றம்

சொத்தின் உரிமையாளர் அந்த சொத்தை விற்கும் முன்பு நிறுவனத்திற்குரிய கட்டண பாக்கி அனைத்தையும் செலுத்திவிட வேண்டும். மேலே கூறப்பட்டவாறு விற்பனையாளர் கட்டண பாக்கியை தீர்க்கவில்லையெனில் அந்த கட்டண பாக்கியை தீர்க்கும் வரை அந்த வளாகத்திற்கு ஏற்கனவே இருக்கும் இணைப்பின் மூலம் மின்சாரம் வழங்க மறுக்கலாம், அல்லது நிறுவனத்திற்குரிய கட்டண பாக்கியை தீர்க்கும் வரை அந்த வளாகத்திற்கு புதிய இணைப்பு வழங்க மறுக்கலாம்"

6. மேலே கூறப்பட்டுள்ள கட்டண பாக்கி, மின்சார சட்டம், 2003, உடன் இணைந்த விநியோகத்தின் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான சட்டப்படியான கட்டண பாக்கிக்கு இணையான தன்மை பெறும் என்பதை நாங்கள் குறித்துக்கொள்ளலாம்.

7. முந்தைய உரிமையாளரின் கட்டண பாக்கிக்கு பிந்தைய உரிமையாளராக எதிர்மேல்முறையீட்டாளர் பொறுப்பாக மாட்டார் என்ற காரணத்தின் பேரில் உறுதிப்பட்ட இந்த கேட்பினை இரத்து செய்யக்கோரி தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேச உயர்நீதிமன்றத்தின் முன்பு எதிர்மேல்முறையீட்டாளர் நீதிப்பேராணை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதற்கு ஆதரவாக இந்த நீதிமன்றத்தின் *இஷா மார்பிள்ஸ் எதிர் பீகார் மாநில மின்சார வாரியம்*

மற்றும் ஒருவர்[1] மற்றும் *தெலங்காணா தென்னக மின் பகிர்மான நிறுவனம் லிமிடட் (அதன் தலைமை நிர்வாக இயக்குநர் மூலம்) மற்றும் பலர் எதிர் கோபால் அகர்வால் மற்றும் பலர்*[2] ஆகிய தீர்ப்புகளை சார்பு செய்துள்ளார். அந்த தீர்ப்புகள் மேல் சார்பு செய்தது 1–ம் மேல்முறையீட்டாளரின் கேட்பினை இரத்து செய்து உத்தரவிட கற்றறிந்த தனி நீதிபதியை அறிவுறுத்தி இனங்கச்செய்துள்ளது. இந்த உத்தரவினை எதிர்த்து இருவர் அமர்வின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும் 30.04.2018 தேதி அன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

8. மேலே கூறப்பட்டுள்ள சர்ச்சையின் வரையரையில் வாதங்களை கவனமாக ஆராய்ந்து இஷா மார்பில்ஸ்[3] வழக்கில் மாநில நிதி நிறுவனங்கள் சட்டம், 1951, பிரிவு 29 (1) – ன் படி விற்பனை நடந்துள்ளது என்பதையும் ஆனால், இந்த ஏல அறிவிப்பை போல முக்கியமான அம்சமான மின் கட்டண பாக்கி அல்லது வேறு ஏதேனும் பாக்கி தொடர்பான பிரச்சனையை குறிப்பாக கையாளும் எந்த சரத்தும் இல்லை என்பதையும் குறிப்பு எடுத்துக்கொண்டோம். மின்சார சட்டம், பிரிவு 2 (சி)–ன் படி மின்சாரம் வழங்கப்படும் எந்த ஒரு நபரும் நுகர்வோர் எனப்படுவர் என்றும் மின் கட்டண பாக்கி செலுத்தும் பொறுப்பு நுகர்வோர் மீதே சுமத்தப்படுவதால் கிரையம் பெறுபவர் நுகர்வோர் அல்ல என்பதை வலியுறுத்தவே இந்நீதிமன்றம் மின்சார சட்டம், 1910, பிரிவு 24–ன் பொருளில் அதன் நிலைபாட்டை

---

[1] (1995) 2 SCC 648
[2] (2018) 12 SCC 644
[3] (மேற்கண்டவாறு)

தெளிவுபடுத்தியது. மேலும் மின் உபயோகம் எதுவும் இல்லாத போது பின் கிரையம் பெறுபவர் உபயோக கட்டணத்திற்கான சட்டப்படியான பாக்கி எதுவும் இன்றி மறு இணைப்பையே கோருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது. நாங்கள், 15.11.2019 தேதியிட்ட உத்தரவில் தற்போது உள்ள மின்னனு ஏல அறிவிப்பில் "மின் கட்டண பாக்கி" உட்பட பல்வேறு கட்டண பாக்கிகளிலிருந்து அதிகாரம் பெற்ற அலுவலரை விடுவிப்பது போல சரத்து 26–ன் தன்மையை கொண்ட குறிப்பிட்ட சரத்து ஏதேனும் எதிர்மேல்முறையீட்டாளர் சார்பு கொள்ளக்கோரிய நீதிமன்ற உத்தரவுகளின் பொருளில் உள்ளதா என குறிப்பிட்டு எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞரிடம் ஒரு கேள்வி எழுப்பியிருந்தோம். எதிர்மேல்முறையீட்டாளர் குறிப்பிட்ட தீர்ப்புகளை பொதுவாக நோக்கும் போது, அவ்வாறான சரத்துகள் எதுவும் பிரச்சனைக்குரிய வழக்குகளில் இல்லை.

9. மின் கட்டண பாக்கியின் அம்சங்களை கையாளும் பிந்தைய நீதிமன்ற தீர்ப்புகள் இருப்பதை எங்களால் காண முடிகிறது. விநியோகத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படியான கட்டண பாக்கிகள் சட்டப்படியான பாக்கியின் சம தன்மையை பெறும் என்று இந்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது (*ஹைத்ராபாத் வனஸ்பதி லிட் எ.திர் ஆந்திரா மாநில மின் வாரியம் மற்றும் பலர்*[4]). நுகர்வோர் ஒவ்வொருவருடனும் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது நுகர்வோருக்கு விநியோகத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை கவனத்திற்கு கொண்டு வருவதற்காக

[4] (1998) 4 SCC 470

மட்டுமே. ஆனால் அது மட்டுமே கட்டண பாக்கியை முழுவதுமாக ஒப்பந்த தன்மை கொண்டதாக மாற்றாது.

10. மின் கட்டண பாக்கி தொடர்பாக கையாளும் குறிப்பிட்ட சட்ட பிரிவினை கொண்ட இந்த வழக்கிற்கு ஒத்த *தாஜ்ஹின் ஹரியானா பிஜ்லி விட்ரான் நிகாம் லிட் எ. பாரமவுன்ட் பாலிமர்ஸ் பிரைவேட் லிட் நிறுவனம்*[5] என்ற வழக்கில் இந்த நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்களால் நாங்கள் கூடுதல் பலம் பெறுகிறோம். அத்தகைய காட்சி நிகழ்வில், உரிமை மாற்றம் பெறுபவர் மின் இணைப்பினை அனுபவிக்க விரும்பினால் அவர் நிலுவையில் கட்டண பாக்கி ஏதேனும் இருப்பின் அதனை மின்சாரம் விநியோகிப்பவருக்கு செலுத்த வேண்டும் என்றும் விநியோகிப்பவருக்கு கட்டண பாக்கி ஏதேனும் இருக்கும் போது அதனை முன்னமே திருப்பி செலுத்தாத பட்சத்தில் அவர்களுக்கு முன்னதாக அவ்வாறு அறிவிக்கப்படவில்லை என்றால் எந்த ஒரு வளாகத்திற்கும் மறு இணைப்போ அல்லது புதிய இணைப்போ வழங்கக்கூடாது என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. ஏலம் கேட்பவர் "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே என்ற அடிப்படையில்" ஏலம் கேட்கும் போது எதிர்மேல்முறையீட்டாளர் வளாகத்தை ஆய்வு செய்து அனைத்து விதமான கட்டண பாக்கியையும் விசாரித்திருப்பார் என்று நாங்கள் காணலாம். மின்

[5] (2006) 13 SCC 101 (இரு நீதிபதிகள் அமர்வு)

கட்டண பாக்கி உட்பட பல்வேறு கணக்குகளின்படியான கட்டண பாக்கியையும் அளவீடு செய்து குறிப்பிட்டுள்ளதால் மேலே கூறப்பட்டுள்ள தீர்ப்புகளை போல இந்த வழக்கின் பொருண்மைகளும் மிக வெளிப்படையாக உள்ளது. எனவே இது தொடர்பாக எதிர்மேல்முறையீட்டாளர் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

12. *பஸ்சிமன்சால் வித்யுத் விட்ரான் நிகாம் லிட் மற்றும் பலர் எதிர் டிவிஎஸ் ஸ்டீல்ஸ் மற்றும் அலாய்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மற்றும் பலர்* [6] என்ற வழக்கில் இதற்கு ஒத்த சட்ட பிரிவிற்கு இதே போன்ற தீர்வு காணப்பட்டுள்ளது. மேலும், இணைப்பிற்கு அனுமதியளிப்பது அல்லது மின்சாரம் வழங்குவது தொடர்பான நிபந்தனைகளை சட்ட விதிகள் கட்டுப்படுத்தும் போது, அந்த விதிகள் மற்றும் விதிமுறைகள் அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னிச்சையாகவோ, ஒருதலைபட்சமாகவோ, நியாயத்திற்கு ஒவ்வாததாகவோ இல்லாத பட்சத்தில் அத்தகைய விதிகள் மற்றும் விதிமுறைகள் தேவையை பூர்த்தி செய்ய விநியோகஸ்த்தர் வலியுறுத்தலாம் என்று மேலும் கருத்து கூறப்பட்டுளளது. கட்டண பாக்கியை செலுத்துமாறு நிபந்தனை விதிப்பது தானே நியாயத்திற்கு ஒவ்வாததாகவோ தன்னிச்சையானதாகவோ அழைக்க முடியாது.

13. *ஹரியானா மாநில மின் வாரியம் எதிர் ஹனுமான் ரைஸ் மில்ஸ், தனாவ்ரி மற்றும் பலர்*[7] என்ற வழக்கில் கொடுக்கப்பட்ட காட்சி

[6] (2009) 1 SCC 210 (இரு நீதிபதி அமர்வு)
[7] (2010) 9 SCC 145 (இரு நீதிபதி அமர்வு)

அமைப்பில், விற்பனையின் விதிகள் மற்றும் நிபந்தனையில் மின் கட்டண பாக்கியின் நிலுவையினை குறிப்பிடவில்லை என்றும் அந்த பொருண்மைகளின்படி பிந்தைய உரிமை மாற்றம் பெற்றவர் மீது அந்த கட்டண பாக்கியை சுமத்த முடியாது என தீர்வு கண்டுள்ளதால் சற்று மாறுபாடான கருத்து நிலைபாட்டினை நாங்கள் காணலாம்.

14. *சிறப்பு அதிகாரி, வர்த்தகம், ஒரிசா வடகிழக்கு மின் விநியோக நிறுவனம் மற்றும் ஒருவர் (NESCO) எதிர் ரகுநாத் பேப்பர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் ஒருவர்*[8] என்ற வழக்கில் முதன்முறையாக பெறக்கோரும் இணைப்பிற்கும் மறு இணைப்பிற்கும் இடையேயான ஒரு வேறுபாடு ஏற்படுத்தியுள்ளதை நாங்கள் காணலாம். அந்த வழக்கில் முந்தைய உரிமையாளரிடமிருந்து ஏலம் எடுத்தவருக்கு மின் இணைப்பினை மாற்றம் செய்ய மனு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை, ஆனால் உண்மையில் புதிய இணைப்பு கோரப்பட்டுள்ளது. அதில் இருக்கும் விதிமுறைகளின் ஒளியில், மறு இணைப்பிற்கு மட்டுமே முந்தைய கட்டண பாக்கியை செலுத்த வேண்டும். எனவே எதிர்மேல்முறையீட்டாளர் மின்கட்டண பொருப்பிலிருந்து விடுவிக்கப்படுவதாக தீர்வு காணப்பட்டது. இந்த நீதிமன்றம் *தெலங்கானா தென்னக மின் பகிர்மான நிறுவனம் லிட் (அதன் தலைமை நிர்வாக இயக்குனர் மூலம்) மற்றும் பலர்*[9] என்ற

[8] (2012) 13 SCC 479 (இரு நீதிபதி அமர்வு)

[9] (மேற்கண்டவாறு)

வழக்கின் பொருண்மைகள் NESCO[10] வழக்கிற்கு ஒத்து போவதாக கண்டு அதையே வரிசையில் பின்பற்றியது.

15. இணைப்பினை பெற்றிருந்த முந்தைய உரிமையாளரின் கட்டண பாக்கி மீதான பொறுப்பு தொடர்பாக தெளிவின்மை இருப்பதாக எங்கள் முன்பு வலியுறுத்தப்பட்டதால் மேலே கூறப்பட்டுள்ள தீர்ப்பிற்குள் நாங்கள் ஆய்வுக்கு சென்றோம். அவற்றில் பொருண்மைகள் தொடர்பாக சில வேறுபாடுகள் உள்ளன. ஆனால், எங்களது கருத்தில், தெளிவான நீதிசார் சிந்தனை எழுகிறது. அதனை இங்கே வலியுறுத்துவது அவசியமாகும்:

அ. மின்கட்டண பாக்கியானது மின்சார சட்டத்தின் கீழ் மற்றும் விநியோகத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் படி சட்டப்படியான தன்மையுள்ளதாக இருக்கும் போது, சட்டப்பிரிவுகளின்படி, குறிப்பாக மின்சார சட்டம், 2003, பிரிவு 56–ன் படி (மின்சார சட்டம், 1910 பிரிவு 24க்கு சமமானது) அதனை தளர்த்த முடியாது, அது முழுமையாக ஒப்பந்தத்தின் படியான கட்டண பாக்கியின் தன்மையையும் பெறாது.

ஆ. கேள்விக்குரிய மின்னனு ஏல அறிவிப்பு தொடர்பான வழக்குகளில் மின் கட்டண பாக்கியானது அது அறுதியிடப்பட்டதோ இல்லையோ, நிலுவையிலிருப்பது ஏலம்

[10] (மேற்கண்டவாறு)

பெறுபவரின் பொறுப்பு என குறிப்பாக சொல்லப்பட்டுள்ளது என்றும் விற்பனையானது "எவ்வாறு இருக்கிறதோ எங்கு இருக்கிறதோ என்ன இருக்கிறதோ எவ்வித மீட்புரிமையுமின்றி அவ்வாறே என்ற அடிப்படையில்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும் பட்சத்தில் மின் கட்டண பாக்கியை செலுத்தும் பொறுப்பு எதிர்மேல்முறையீட்டாளரிடமே (ஏலம் எடுத்தவர்) இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இ. இணைப்பு மற்றும் மறு இணைப்பு ஆகிய இரண்டு அம்சங்களும் விநியோகத்தின் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரிவு 8.4–ன் படி கட்டுப்படுத்தியுள்ள நிலையில், அவற்றின் மீதான வாதம் தற்சமயம் உள்ள வழக்கு போன்றவற்றில் இருக்காது.

16. மேலே கூறப்பட்டுள்ளவாறு எழும் சட்ட நிலைபாடு காரணமாக எதிர்ப்புக்குள்ளான உத்தரவு நிலைக்கத்தக்கதல்ல என்று முடிவு கண்டு, எதிர்மேல்முறையீட்டாளர் – ஏலம் எடுத்தவரிடமிருந்து முந்தைய உரிமையாளரின் நிலுவைத்தொகையினை கோர 1–ம் மேல்முறையீட்டாளர் முழு உரிமையுடையவர் என கருத்து தெரிவித்து எதிர்ப்புக்குள்ளான உத்தரவை இரத்து செய்கிறோம்.

17. இதன்படி, தரப்பினர்கள் தங்களது செலவுகளை தாங்களே ஏற்றுக்கொள்ளுமாறு விடுத்து, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."